UNIVERSITY OF SRI LANKA RECEIVED 1980-6-18 PERIODICALS

ஈழநாடு 50 சதம்
The EELANAADU
மலர் [illegible] ஆனி 4 ஷஃபான் 4 இதழ் 129
யாழ்ப்பாணம் புதன்கிழமை 18-6-1980

# உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

குத்தகைக் காணிகளை மீண்டும் தம்மிடம் ஒப்படைக்குமாறு கோரி, நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவில் முன்றலில் உண்ணாவிரதமிருந்த வள்ளுவர் சமூகத்தினர் நேற்று ஏற்பட்ட சமரச முடிவைத் தொடர்ந்து உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டனர்.

கச்சேரி நில அளவையாளர் பட [illegible] வந்து வள்ளுவர் சமூகசேவைக் கழகத்திற்குரிய காணிகளில் எல்லைக் கட்டைகள் அடித்து, காணிகள் வள்ளுவர் சமூகத்தினருக்குக் கையளிக்கப்பட்டது. நெடுந்தீவு இராமசேவகர் வழங்கிய குளிர்பானத்தை அருந்தி, நான்கு நாள் மேற்கொண்ட உண்ணாவிரதத்தை வள்ளுவர் சமூகத்தினர் கைவிட்டனர்.

# "கனகர் ஐ.தே.கட்சியின் அங்கத்தவரே"

## கட்சி செயலாளர் பதில்மனு

### தேர்தல் ஆணையாளரும் மனுதாக்கல் செய்தார்

(கொழும்பு)

"காலஞ்சென்ற பொத்துவில் இரண்டாவது எம். பி. திரு. எம். கனகரத்தினம், ஐக்கியதேசியக்கட்சியின் ஒரு அங்கத்தவராகும். அவர் ஐக்கியதேசியக்கட்சியில் சேர்ந்திருந்தார். அவரது, கட்சி சந்தாப் பணம் அவரது மாதச் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்டு வந்தது. ஆகவே காலியாகவுள்ள பொத்துவில் தொகுதி புதிய எம். பி. நியமனம் எனது கட்சிக்கே வழங்கப்படவேண்டும்".

இவ்வாறு ஐக்கிய தேசியக்கட்சி செயலாளர் திரு. ஹர்ஸா அபயவர்த்தன, அப்பீல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பதில் மனுவில் கோரியுள்ளார்.

பொத்துவில் தொகுதி புதிய எம். பி. நியமனம் தொடர்பாக எதிர்க்கட்சித்தலைவரும், த. வி. கூட்டணி செயலாளர் நாயகமுமான திரு அ. அமிர்தலிங்கம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுமீது, பதில் மனுக்களை தேர்தல் ஆணையாளர் திரு எம். ஏ. பியசேகராவும் ஐக்கியதேசியக்கட்சி செயலாளர் திரு. ஹர்ஸா அபயவர்த்தனவும் தாக்கல் செய்துள்ளனர்.

### தேர்தல் ஆணையாளர் பதில் மனு

தேர்தல் ஆணையாளர் தாக்கல் செய்துள்ள பதிலமனுவில் தெரிவித்துள்ளதாவது:

"பொத்துவில் தொகுதி புதிய எம் பி நியமனம் தொடர்பாக ஒருவரை நியமிக்குமாறு கோரி, நான் ஐ. தே. கட்சி செயலாளருக்கு கடிதம் எதுவும் எழுதவில்லை. அதேபோல் திரு. அ. அமிர்தலிங்கம் விடுத்த கோரிக்கை தொடர்பாகவும் நான் நிராகரிக்கவுமில்லை; அது பற்றி முடிவெடுக்கவுமில்லை எழுத்துமூலமும் நான் அறிவிக்கவில்லை. ஆகவே திரு. அமிர்தலிங்கம் என்மீது வழக்கு தொடர உரிமையில்லை. ஆனாலும், இப்பொழுது இது சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் வழக்கு விசாரணைகள் முடிந்தபின்னர் இதுபற்றிய முடிவை எடுப்பேன்" என்று தேர்தல் ஆணையாளர் தமது பதில் மனுவில் தெரிவித்துள்ளார்.

### செயலாளர் பதில்மனு

ஐக்கிய தேசியக் கட்சிச் செயலாளர் திரு. அபயவர்த்தன தாக்கல் செய்துள்ள பதில் மனுவில் தெரிவித்துள்ளதாவது:

"காலஞ்சென்ற திரு. எம். கனகரத்தினம் ஐக்கிய தேசியக்கட்சியின் அங்கத்தவராக இருந்தவர். அவர் மாதந்தோறும் சந்தா செலுத்தியவர். பொத்துவில் தொகுதி நியமனம் எனது கட்சிக்கே வழங்கப்படவேண்டும். இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும்.

"திரு. எம். கனகரத்தினத்தின் சகோதரி திருமதி பத்மநாதன் அவரது அந்தரங்கச் செயலாளராகக் கடமையாற்றினார். அவரது சத்தியக் கடதாசி ஒன்றையும் இம்மனுவுடன் இணைத்துள்ளேன். திரு. எம். கனகரத்தினம் மரணமானபோது ஐக்கிய தேசியக்கட்சி அங்கத்தவராகவே இருந்தவர். இது சம்பந்தமான [illegible] கனகரத்தினத்தின் [illegible] சகோதரி உறுதிப்படுத்தியுள்ளார். இந்தக் கடிதமும் இம்மனுவுடன் இணைத்துள்ளேன்" என்று ஐக்கியதேசியக்கட்சி செயலாளர் தமது பதில் மனுவில் தெரிவித்துள்ளார். (ம)

# கோணேசர் கும்பாபிஷேகம்; யாழ். நகரில் நிதிசேர்ப்பு

(யாழ்ப்பாணம்)

தெட்சண கைலாயம் என போற்றப்படுவதும் திருகோணமலை கோணேஸ்வரர் ஆலய புனராவர்த்தன கும்பாபிஷேகம் அடுத்தாண்டு தைமாதம் நடைபெறவுள்ளது.

ஆலய புனருத்தாரணவேலைகள் தற்போது நடைபெற்று வருவதால், யாழ்ப்பாண மக்களிடம் நிதி சேகரிக்கும் பொருட்டு ஆலய பரிபாலன சபையினர் திருமலை எம். பி. திரு. இரா. சம்பந்தன் தலைமையில், கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் வந்துள்ளனர். இக்குழுவில், ஆலயபரிபாலன சபைத்தலைவர் சட்டத்தரணி எம். கே. செல்வராசா, செயலாளர் சைவப்புலவர் ரி. வடிவேலு, திரு. எம். கே. கணபதிப்பிள்ளை, ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். இவர்களுக்கு அனுசரணையாக யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரனும், மானிப்பாய் எம் பி திரு. வி. தர்மலிங்கமும் நிதிசேகரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். யாழ்ப்பாண மக்கள் கோணேஸ்வரர் ஆலய புனருத்தாரண வேலைகளுக்கு பெருநிதிவழங்கி வருவதாக ஆலயபரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

பொலிகண்டி கமலா கொலைவழக்கு

# நீதிபதிக்குக் கிடைத்த தகவல்பற்றி எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

பொலிகண்டி இளைஞர் களை எதிரிகளுக்கு தீங்கு விளைவிக்கப்பட விருப்பதாக தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாக பருத்தித்துறைநீதவான் திரு. கே. எஸ். மகேசன் நேற்று தெரிவித்தார்.

பருத்தித்துறை நீதிமன்றத்தில், பொலிகண்டி மாணவி கமலா கொலைவழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, நீதிமன்றத்திற்கு வருகிறவரும், பொலிகண்டியைச் சேர்ந்தவர்களை எழுந்து நிற்குமாறு நீதவான் தெரிவித்தார் ஐவர் எழுந்துநின்றார்கள்.

நீதிமன்றத்திற்கு வெளியில் நிற்பவர்களில் பொலிகண்டியிலிருந்து வந்திருப்பவர்களை உள்ளேவரும்படி நீதவான் தெரிவித்தார் வெளியில் நின்ற சிலர் உள்ளே வந்தனர்.

எதிரிகளுக்கு பொலிகண்டி இளைஞர்களால் தீங்குவிளைவிக்கப்படவிருப்பதாகத் தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக நீதவான் தெரிவித்தார்.

நீதவான் மேலும் தெரிவித்ததாவது:

எதிரிகள் நீதிமன்றப் பொறுப்பில் இருக்கின்றனர். எதிரிகளுக்கு தீங்குசெய்ய எவ

(8-ம் பக்கம் பார்க்க)

# முதலாம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆஜர்!

(யாழ்ப்பாணம்)

பொலிகண்டி சிறுப்பிட்டி மாணவி கமலா கொலை வழக்கில் நேற்று முதலாம் எதிரியான ராஜன் சார்பில் சட்டத்தரணி எஸ். இராமச்சந்திரன் ஆஜரானார்.

இவ்வழக்கு நேற்று பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் கே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 80ம் ஆண்டு மார்ச் 31ல் பொலிகண்டியிலுள்ள மாணவி கமலாவை ஆனை விழுந்தான் மயானத்திற்கு சமீபத்தில் கொலை செய்ததாகவும், 5600 ரூபா பெறுமதி

(8-ம் பக்கம் பார்க்க)

# அமைச்சர் தொண்டமான் நாளை யாழ். விஜயம்

## மூன்று நாட்கள் தங்கியிருப்பார்

(யாழ்ப்பாணம்)

இராமியக் கைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் நாளையாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்கின்றார்.

உத்தியோகபூர்வவிஜயத்தை மேற்கொள்ளும் அமைச்சர் எஸ் தொண்டமான், மூன்று நாட்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து பலவேறு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வார்.

நாளைக்காலை ரயில் மார்க்கமாக யாழ்ப்பாணம் வந்து சேரும் அமைச்சர் நல்லூர் கந்தசுவாமி கோவிலில் நடைபெறும் விசேட பூசையில் கலந்துகொள்வார்.



### நிகழ்ச்சிகள்

நாளைய நிகழ்ச்சிகளில் முதலில், திருநெல்வேலி குடியேற்றத்திட்டத்திற்குச் சென்று, அங்கு அரசாங்கத்தால் புதிதாக அமைக்கப்பெற்ற பால் சேகரிப்பு நிலையத்தைத்திறந்து வைப்பார். அங்கிருந்து அச்சுவேலிக்குச்சென்று அங்கு அரசாங்கத்தால் புதிதாக அமைக்கப்பட்ட கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையத்தைத் திறந்து வைப்பார். பின்னர் அச்சுவேலி தொழில்பேட்டை, திருநெல்வேலி விவசாயம் பண்ணையில் உள்ள இணைப்படுத்தும் நிலையம் ஆகியவற்றைப் பார்வையிடுவார். திருநெல்வேலி விவசாய பண்ணையில் அமைச்சருக்கு மதியபோசனவிருந்து அளிக்கப்படும். பிற்பகல் 3-30 மணிக்கு பண்ணை ஆறு அபிவிருத்தித் திட்டத்தைப் பார்வையிடுவார். அங்கிருந்து நல்லூர் அரசடி வீதியிலுள்ள பாதணிப்பண்ணையைப் பார்வையிடுவார். 4-45 மணிக்கு நாவலர் மண்டபத்தில் இலங்கை - இந்திய நட்புறவுச்சங்கத்தால் ஒழுங்குசெய்யப்பட்ட கூட்டத்தில் உரையாற்றுவார் மாலை 5-30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கைத்தறி நெசவாளர்களையும், சமகாரர்களையும் சந்தித்துக்கலந்துரையாடுவார். [illegible] தலைமையில் இக்கலந்துரையாடல் இடம் பெறும். 6-30 மணிக்கு யாழ். றிம்மர் மண்டபத்தில் நகைத் தொழிலாளர் சங்கப்பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவார்.

இரண்டாம்நாள் வெள்ளிக்கிழமை காலை யாழ். செயலகத்தில் நடைபெறும் விவசாயக் குழுக்கூட்டத்தில் அமைச்சர் கலந்துகொள்வார். 10-30 மணிக்கு வண்ணை வெங்கடே

(8-ம் பக்கம் பார்க்க)

# வழமைபோல் வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மீண்டும் வழக்கம்போல் நடைபெற்றுவருகிறது. மாணவரின் பகிஷ்கரிப்பைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் [illegible] மாணவர்கள் [illegible]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### சோதிடம்

கல்வி, திருமணம், உத்தியோகம், தொழில், வெளிநாடு செல்லுதல் முதலிய பிரச்னைகள் தீர்த்துவைக்கப்படும். தட்சிணையுடன் ரூபா 10/- னும் அனுப்புக. KL. M. Krishnapillaiy ஸ்ரீ ஆதிபராசக்தி சோதிட நிலையம், காங்கேசன்துறை பஸ் நிலையம், காங்கேசன்துறை. 6037

### பயிற்சி

அரிய சந்தர்ப்பம், ஆண் வரும் செலவும். ரேடியோ- டெலிவிஷன், மூன்று மாத டிப்ளோமா பயிற்சி சனி, ஞாயிறு புதிய வகுப்புக்கள். 18-6-80 முதல் ஆரம்பம். அனுபவம் தேவையில்லை. விபரங்களுக்கு: நாவலர் அக்கடமி, 11, மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 6059

### WANTED

Accounts Typist. Female between twenty five and thirty five with minimum three years experience. Very good knowledge of English essential. Apply Advt No: 6058, C/o Eelanadu, P. o. box: 49. Jaffna. 6058

### தேவை

தனி உழைத்திருக்கும் அப்பளம் தயாரிக்க அனுபவம் வாய்ந்த தொழிலாளர் தேவை. திறமைக்கு ஏற்ற ஊதியம் உண்டு. நேரில் வரவும். சக்தி இண்டஸ்ரீஸ், 99, அருணகிரி வீதி, திருக்கோணமலை. 6056

சிறிய நடுத்தர கார் தேவை, நம்பர், மொடல், தற்போதைய நிலைமை, விலை போன்ற விபரங்களை கடிதமூலம் அறிவிக்கவும். விளம்பர இல: 6060, C/o, ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 6060

டிராக்டர் தேவை. நம்பர், மொடல், தற்போதைய நிலைமை, விலை, இடம்போன்ற விபரங்களை கடிதமூலம் தெரிவிக்கவும். விளம்பர இல: 6061 C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 6061

இறைவீடிக் மில், வேலை தெரிந்த ஆண்கள், பற்பொடி, சீயாக்காய் பவுடர், அப்பளம் தயார் செய்வதற்கு பெண்பிள்ளைகள் தேவை, தேவராஸ் இறைவீடிக் மில், 159/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 6067

### விற்பனைக்கு

Honda - C-50 மோட்டார் சைக்கிள் Self - Starter உடன் விற்பனைக்குண்டு விலை 4750/- Ramson's, 19, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 6062

## அடைவு நகை ஏல விற்பனை

ஹெட்டிபொல மெயின் வீதி 48, இலக்கக்கடையில் அடைவு பிடிக்கும் தனுஸ்கோடி செல்லையாவிடம் 1-4-76 முதல் 31-12-78 முடிய அடைவு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் 7-7-80-ம் திகதி காலை 9 மணிமுதல் மேற்படி ஸ்தாபனத்தில் வைத்து என்னால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

திருமதி T. V. R. சுவாமி, ஏலதாரர். 6064

### விற்பனைக்கு

கொருடாவில், அம்மன் வீதியில் வீடும் வளவும், நல்ல தண்ணீர் கிணற்றுடனும், சுற்றிவர மதிலுடனும், விற்பனைக்குண்டு காலை 8 மணிக்கும் மாலை 4 மணிக்கும் இடையில் பார்வையிடலாம். தொடர்பு கொள்ளவும்: திருமதி இ. இராமச்சந்திரன், அம்மன் வீதி, கொருடாவில், தொண்டைமானாறு. 5986

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் மூன்று அறையுடன் கூடிய ஒன்றரைப் பரப்புக் காணியுடன் கூடியவீடு உடன் விற்பனைக்குண்டு. காலியான நிலையிலுள்ளது. தரகர் அவசியமில்லை, நேரில் வரவும். ச. கந்தசாமி, 154, கஸ்தூரியார் வீதி, (புதிய இல: 348) யாழ்ப்பாணம். 6071

## பின்னுறுதிக் கட்டளைப் பற்றிய அறிவித்தல்

(இல 84 ஆ — பிரிவுகள் 524, 532)

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில்

காரைநகர் வடக்கு சுப்பிரமணியம் இராசசேகரம் என்பவரின் மரணசாதனத்தின் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்
சுப்பிரமணியம் குலசேகரம், இடைப்பிட்டி, காரைநகர் இமுக்கு, காரைநகர்.

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் இல. 17

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980-ம் ஆண்டு ஆனி மாதம் 26-ந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி ஒப்பம்
தா. குலஞானம்,
பதிவாளர்,

1980-ம் ஆண்டு ஆனி மாதம் 13-ந் நாளாகிய இன்று திகதியிடப்பட்டது. 6036

## பெண் டாக்டர் நியமிக்கப்படுவார்

(மன்னார்)

மன்னார் ஆதார வைத்தியசாலைக்கு ஒரு பெண் வைத்திய நிபுணரை நியமிக்க உடன் நடவடிக்கை எடுக்கப்படுமென மூதூர் எம். பி.யும் மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனாப் எம். ஈ. எச். மஹ்ரூப் கூறினார்.

மன்னார் வைத்தியசாலைக் குழு அங்கத்தவர்கள் திரு ஏ. ஸ். அந்தோனிப்பிள்ளை, ஜனாப் கலைமான் தாஜுதீன் ஆகியோர் மாவட்ட அமைச்சரைச் சந்தித்து மன்னார் வைத்தியசாலையில் பெண் வைத்திய நிபுணர் இல்லாததால் பெண் நோயாளிகள் படும் அவஸ்தை பற்றி எடுத்துக் கூறியதையடுத்து; மன்னார் வைத்தியசாலைக்கு உடனடியாக ஒரு பெண் வைத்தியரை நியமிக்க தாம் நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் கூறினார். [illegible] (கு)

## முக்கிய அறிவித்தல்

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
### சோலைவரி 2-ம் கந்தாயம் 1980

1980-ஆம் ஆண்டு 2-ம் கந்தாயத்துக்கான சோலைவரிப் பணம் 30-6-80 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு முன்னதாக மாநகராட்சி மன்றப் பணிமனையில் செலுத்தப்படுதல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப் பணத்திற்கு மேலதிகமாக கீழ்வரும் விபரங்களின்படி வெலியாத்துப்பணம் அறவிடப்படும்.

வெற்றுக்காணிகள், குடியிருப்புக்காணிகள் - 15 வீதம்

இலையல்லாத காணிகள் 10 வீதம்

காசோலைகள், காசுக் கட்டளைகள், அஞ்சற் கட்டளைகள் முதலியன "யாழ்ப்பாண மாநகர ஆணையாளர்" சார்பில், அஞ்சல் சேவையில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு முன்கூட்டியே அனுப்பப்படல் வேண்டும். அப்படியாக அனுப்பப்படும் பொழுது வரியிறுப்பாளர்கள் ஆதனத்தின் தற்போதைய வரிமதிப்பு இலக்கம், வீதியின் பெயர், வட்டார இலக்கம் முதலிய விபரங்களுடன் வரிப் பணத்தை அனுப்புமபடிவேண்டப்படுகின்றனர்.

க. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம். 16-6-80

6073

## அஸாமில் பாதிக்கப்பட்ட மக்களுக்குநஷ்டஈடுவழங்குக
### முன்னாள் முதல்வர் அரசிடம் வேண்டுகோள்

கௌகாத்தி, ஜூன் 17 அஸாம் கிளர்ச்சிகளின் போது இடம்பெற்ற நிலைவரம், படுகொலைச் சம்பவங்களை வன்மையாகக் கண்டித்துள்ள முன்னாள் முதல்வர், பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு நஷ்டஈடு தரவேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

அஸாம் பிரச்னைகளைத் தீர்க்க மத்திய அரசு உடனடியாக அரசியலமைப்புரீதியான நடவடிக்கைகளை எடுத்து உடன் தீர்வுகாணாவிட்டால் பிரச்னைகள் மேலும் அதிகரிக்கும் என்றும் முன்னாள் முதல்வர் திரு. கோல்கோரா கூறினார்.

தேவேளை இப்பிரச்னைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணவேண்டும் என்று பிரதமர் திருமதி இந்திரா காந்தி தெரிவித்திருந்த போசனையை எதிர்த்து அஸாம் மாணவர் சம்மேளனம் செவிசாய்த்திருப்பதை ராஜ்யசபாவில் உறுப்பினர்கள் பலர் வரவேற்றிருக்கின்றனர். (கு)

## திருடப்பட்ட வள்ளம், வலைகள் மீட்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

மயிலிட்டி கடற்கரையில் களவாடப்பட்டதாகக் கூறப்பட்ட மீன்பிடி வள்ளத்தையும், வலைகளையும் காங்கேசன் துறைப் பொலிசார் கைப்பற்றியுள்ளதுடன், இது சம்பந்தமாக சந்தேகத்தின்மீது ஒருவர் கைது செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு மயிலிட்டி வீரமாணிக்கம் கடற்கரையில் கட்டப்பட்டிருந்த சுமார் 40 ஆயிரம் பெறுமதிவாய்ந்த "புஷ்பம்" என்ற புதிய உள்ளூரும் வள்ளத்திலிருந்த மீன்பிடி வலைகளும் திருடப்பட்டதாக காங்கேசன்துறை பொலிசில் செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்த புலன் விசாரணையில் ஈடுபட்ட மேற்படி பொலிஸ் நிலைய உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டர் இராசரத்தினம் தலைமையிலான பொலிசார், இறும்பிட்டி, மயிலிட்டி, கிளி நொச்சி ஆகிய இடங்களில் விசாரணை மேற்கொண்டனர்.

விசாரணையின் போது தெல் இலங்கையைச் சேர்ந்த சமரதுங்கா முதியான்சலாகே சோமபாலா அல்லது மார்ட்டின் என்பவர் இக்கடத்தலில் ஈடுபட்டுள்ளதாகப் பொலிசாருக்குக் கிடைத்த தகவலையடுத்து பொலிசார் சந்தேகநபரைக் கைதுசெய்து மேற்கூறப்பட்ட இடங்களிலிருந்து திருடப்பட்டதாகக் கூறப்படும் வள்ளத்தையும் வலைகளையும் கைப்பற்றியுள்ளனர். சந்தேகநபர் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார். (கே)

## எம். ஜி. ஆருக்கு வாழ்த்து

(மன்னார்)

மன்னார் மாவட்ட எம். ஜி. ஆர். மன்றத்தலைவர் ஜனாப் அதம்பாவா தமிழகத்தில் எம். ஜி. இராமச்சந்திரன் தலைமையிலான அ. தி. மு. க. வெற்றியடைந்தது குறித்து மன்றத்தின் சார்பில் வாழ்த்துத் தந்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். (கு)

## பொம்மைவெளியில் 18 மலசல கூடம்

(யாழ்ப்பாணம்)

சுமார் இரண்டலரலட்சரூபா செலவில் பொம்மைவெளி குடியேற்றத்திட்டத்தில் 18 மலசலகூடங்களை நிறுவுவதற்கு பொதுவசதிகள் சபை அங்கீகாரமளித்துள்ளது.

இவற்றிற்கான அடிக்கல்லை கடந்தவாரம் யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் நாட்டிவைத்தார்.

பொம்மைவெளியிலுள்ள சகல வீதிகளிலும் இத்திட்டத்தில் ஆண்களுக்கும், பெண்களுக்குமாக தனித்தனி மலசலகூடங்கள் அமைக்கப்படும்.

யாழ்ப்பாண புதிய சோனகதெரு முன்னேற்றச் சங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கையின் பயனாக பொது சேவைகள் சபை இதற்கான அனுமதியை வழங்கியது குறிப்பிடத்தக்கது. (கே-கு)

## Wanted Building Contractors

FOR LARGE AND SMALL WORK IN JAFFNA
**APPLY**
PLANNING CONSULTANCY,
15, WALUKARAMA ROAD,
COLOMBO-3. 6068

## குருக்கள் தேவை

யாழ். நகர எல்லைக்குள் அமைந்துள்ள சைவாலயமொன்றில் அர்ச்சகராக சேவை செய்வதற்கு 35 வயதிற்கு மேற்பட்ட கல்வியறிவொழுக்கமுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதிக்கேற்ற ஊதியம்வழங்கப்படும். பிராமணரல்லாதாரும் விண்ணப்பிக்கலாம்.

விளம்பர இல: 6069
C/O. ஈழநாடு லிமிட்டெட்,
யாழ்ப்பாணம். 6069

மிள்காய் இலைச் சுருளைத் தடுத்து அதிக விளைச்சலைப் பெறுங்கள்

BASF

குமுலுஸ் எஸ்

நீரில் கரையக் கூடிய 80% கெந்தகம்

- நீரில் கலந்தவுடன் பால் நிறமாக மாறுகிறது.
- மிளகாய் இலைச் சுருளைத் தோற்றுவிக்கும் மைட்களை அழித்தொழிக்கிறது.
- மரக்கறி பயிர் வகைகளில் 'காளான்' தாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது



இது ஒரு "மேற்கு ஜெர்மனி 'BASF'" தயாரிப்பாகும்.

குமுலுஸ் எஸ
500 கிராம் ரூபா 11/50

கிடைக்குமிடம்: சகல விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளரிடமும்

மக்லூட்ஸ் ஸ்தாபனம்
297, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
தொலைபேசி: 32941-5

LIMITED

METROPOLITAN

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டியாகோ கார்ஷியா தீவில்

# படைத்தளத்தை அதிகரிக்க அமெரிக்கா பிரிட்டனுடன் பேச்சு!

## இந்துசமுத்திரத்தில் சோவியத்படையின் நடமாட்டம் அதிகரித்ததன் எதிரொலி

வாஷிங்டன் ஜூன் 17

இந்துசமுத்திரத்திலுள்ள டியாகோகார்ஷியா தீவில் தமது படைத்தள வசதிகளை அதிகரிப்பது குறித்து அமெரிக்கா பிரிட்டனுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்திவருகிறது.

பிரிட்டனுக்குச் சொந்தமான இத் தீவில் அமெரிக்கா ஏற்கனவே கடற்படைத்தள வசதியைப் பெற்றுக்கொண்டிருக்கின்றது.

இந்துசமுத்திரப்பிராந்தியத்தில் சோவியத்யூனியனின் படைகளின் நடமாட்டம் அதிகரிப்பதாலேயே அமெரிக்கா இத் தீவில் தனது படைபலத்தை அதிகரிக்க முனைந்துள்ளது.

யுத்தவிமானங்களைப்பலவற்றை இத் தீவுக்கு அனுப்பி அங்கு நிரந்தரமாக தங்கவைக்கவே அமெரிக்கா விரும்புவதாக தெரியவருகின்றது. (ரு)

### திரிபுராவில மேலும் 5பேர் பலி

திரிபுரா, ஜூன் 17

திரிபுரா மாநிலத்தில் சில இடங்களில் நேற்று இடம்பெற்ற வன்செயல்களில் மேலும் 5பேர் உயிரிழந்துள்ளனர்.

இம்மாநிலத்தில் இடம்பெற்ற கலவரங்களைத் தொடர்ந்து 2லட்சத்து 50 ஆயிரம் பேர் தஞ்சம் முகாம்களில் இருந்து வருகின்றனர். (ரு)

மத்தியகிழக்குப் பிரச்னை:

## ஜோர்டானையும் சேர்க்க அமெரிக்கா முயற்சி!

வாஷிங்டன், ஜூன் 17

மத்தியகிழக்குப் பிரச்னையில் ஜோர்டானையும் சேர்த்துக் கொள்ள அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மிகார்ட்டர் விரும்புவதாக தெரியவந்துள்ளது.

ஜோர்டான் மன்னர் ஹுசைன், அதிபர் கார்ட்டருடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்காக நேற்று வாஷிங்டன் வந்துசேர்ந்தார். இவர்களது சந்திப்புத்தொடர்பாக வெள்ளைமாளிகை அதிகாரி ஒருவர் கருத்துத்தெரிவிக்கையில் மேற்கண்ட தகவலை சூசகமாக வெளியிட்டார்.

இப் பேச்சுவார்த்தைகள் இன்று வெள்ளைமாளிகையில் ஆரம்பமாகவுள்ளன. இப் பேச்சுவார்த்தைகளில் மத்தியகிழக்கும் பிரச்னை தொடர்பான சமரசப்பேச்சுவார்த்தைகளில் எகிப்து இஸ்ரேலுடன் ஜோர்டானையும் சேர்த்துக்கொள்ளுமாறு அமெரிக்கா வலியுறுத்துமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளையில் மத்தியகிழக்குப் பிரச்னைகள் தொடர்பாக சவூதிஅரேபிய மன்னரும் மேற்கு ஜெர்மன் அதிபரும் பேச்சுவார்த்தைகளை நடாத்தியுள்ளனர். (ரு)

# ஐ. நா. விசாரணைக் கமிஷன் அறிக்கை உடன் வெளிவராது

## பணயக்கைதிகளை பார்வையிட அனுமதிக்காததன் எதிரொலி

நியூயோர்க், ஜூன் 17 விவகாரம் தொடர்பாக ஈரான் அமெரிக்க பணயக்கைதிகள் விவகாரம் நடாத்தப்பட்ட ஐக்கிய நாடுகள்சபை விசாரணைக் கமிஷனின் அறிக்கை உடனடியாக வெளியிடப்படமாட்டாது.

ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஐ. நா. விசாரணைக் கமிஷன் இவ் வருட முற்பகுதியில் முன்னாள் ஈரானிய மன்னர் ஷாவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாகவும் பணயக்கைதிகள் விவகாரம் தொடர்பாகவும் விசாரணை நடாத்தியது.

இவ் விசாரணைக் கமிஷனின் அறிக்கையை உடன் வெளியிடவேண்டும் என்று ஈரானிய வெளியுறவு அமைச்சர் ஐதுப் குதுப்சாடே நேற்றுக் கேட்டிருந்தது தொடர்பாக கருத்துவெளியிட்ட ஐ. நா. கமிஷன் அதிகாரி ஒருவர் அந்த அறிக்கை உடனடியாக வெளியிடப்படமாட்டாது என்று தெரிவித்துள்ளார்.

அமெரிக்க பணயக்கைதிகளை விசாரணைக் கமிஷன் உறுப்பினர்கள் பார்வையிடாததைக் கண்டிக்குமுகமாகவே இவ்வறிக்கை வெளியிடப்படமாட்டாது என்றும் அந்த அதிகாரி தெரிவிக்கிறது.

### இன்று பதவியேற்கும்

(புதுடில்லி)

ராஜஸ்தானில் 9 உறுப்பினர்களைக்கொண்ட மந்திரிசபை இன்று பதவியேற்கும். (ரு)

### புளியங்கூடல் உற்சவம்

(சரவணை)

தீவுப்பகுதியில் பிரசித்திபெற்ற ஆலயமான புளியங்கூடல் ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் இம் மாதம் 13ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

தேர்த்திருவிழா இம்மாதம் 21ந் திகதியும் தீர்த்தத்திருவிழா 22ந் திகதியும் நடைபெறும். (ரு)





அடங்கிய செறிதிரவம்
உற்பத்தியாளர்
பேயர் ஜெர்மனி
இலங்கையில் இப்பொருள் தயாரிப்பாளர்
ஹேகெம் லிமிட்டெட்
400. டீன்ஸ்ரோட். கொழும்பு 10.

குரேட்டர் 3% மணிகள்

| | | | |
|---|---|---|---|
| 500 | கிராம் | ரூபா | 10/00 |
| 2 | கி. கிராம் | ரூபா | 32/50 |
| 25 | கி. கிராம் | ரூபா | 380/- |

உண்டேன் EC 20%

| | | | |
|---|---|---|---|
| 100 | மி. லீட்டர் | ரூபா | 15/50 |
| 200 | மி. லீட்டர் | ரூபா | 28/50 |
| 450 | மி. லீட்டர் | ரூபா | 53/50 |


## பணயக்கைதிகளை மீட்க பொறுமை வேண்டும்

வாஷிங்டன் ஜூன் 17

"பணயக்கைதிகளை மீட்டுக்கொள்ளவேண்டுமானால் அமெரிக்கா பொறுமையுடனும், நியாயத்துடனும் நடந்துகொள்ளவேண்டும்"

இவ்வாறு அமெரிக்காவின் முன்னாள் சட்டமாஅதிபர் திரு ராம்ஸே கிளார்க் கூறியுள்ளார்.

தெஹ்ரானில் நடைபெற்ற சர்வதேச மகாநாடு ஒன்றில் கலந்துகொண்டுவிட்டு நாடு திரும்பிய திரு. கிளார்க், நிருபர்கள் மத்தியில் பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

"அமெரிக்கா தன் 53 பணயக்கைதிகளைப் பற்றி மட்டும் சிந்திக்காமல், முன்னாள் ஈரானிய ஷாவின் ஆட்சிக்காலத்தின்போது கொலைசெய்யப்பட்ட ஆயிரக்கணக்கானவர்களைப் பற்றியும் நினைத்துப் பார்க்கவேண்டும்" என்று திரு. கிளார்க் கூறினார். (ரு)

## பாகிஸ்தான் - இந்தியா ஒத்துழைத்து உதவலாம்

### பிரதமர்இந்திரா வெளியிட்ட கருத்து

புதுடில்லி, ஜூன் 17

பாகிஸ்தானும் இந்தியாவும் இரண்டு தனித்தனி சுதந்திர நாடுகளாக இருந்தாலும் ஒன்றுக்கொன்று ஒத்துழைத்து உதவக்கூடாதென்பதற்கு காரணமே இடையாது என்று இந்தியப் பிரதமமந்திரி திருமதி இந்திராகாந்தி தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அதிபர் ஷியாவுல் ஹக்கைச் சந்தித்து திருமதி காந்தி பேச்சுவார்த்தை நடத்தியபோது எடுத்துக்கொண்ட புகைப்படம் ஒன்றுடன் பாகிஸ்தான் பிரஜை ஒருவர் எழுதிய கடி

(7-ம்பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேமஸ் பிளாஸ்கள்
ஒலிப்பதிவு நாடாக்கள்
கமராக்கள், பிளாஷ்கள்
அலங்காரப் பொருட்களுக்கும்
சிறந்த
போட்டோஸ்ரட்
பிரதிகளுக்கும்
பாரத் சென்ரர்
178, நவீனசந்தை,
(புதிய கட்டிடம் உள்பகுதி)
யாழ்ப்பாணம்.
போன்: 8265

ஈழநாடு 50 சதம்
The EELANAADU

## மீனவர்மீது விசாரணை

(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்கள் சென்ற 31 ரோலர்கள் நடுக்கடலில் பழுதடைந்ததினால், பல நாட்கள் தத்தளித்த பின்னர் நெடுந்தீவுக்கரையை அடைந்துள்ளனர்.

கரை ஒதுங்கிய ரோலர்களைப்பற்றிய பொலிசார், மீனவர்களை விசாரணைக்கு உட்படுத்தினர்கள்.

இதேசமயம்மேற்படி ரோலர்களையும், மீனவர்களையும் தேடி மற்றும் சில மீனவர்கள் இராமேஸ்வரத்திலிருந்து ரோலர்களில் புறப்பட்டு, நெடுந்தீவு வந்து சேர்ந்துள்ளனர். நெடுந்தீவு பொலிசார் இவர்கள் பற்றியும், புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (கொ)

மாணவர்களுக்கான
தமிழ்ப் பயிற்சி
3-ஆம் வகுப்பு பயிற்சிவழித் தமிழ் 1-50
6-ஆம் „ தமிழ்மொழிப்பயிற்சி 4-85
7-ஆம் „ தமிழ் (புதுமுறைமாதிரி) 4-00
9-ஆம் „ தமிழ்மொழி பகுதி I—II 4-50
அரிவரி - வண்ணத்தமிழ் (கலர் படங்களுடன்) 2-00
காந்தளகம்
213, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

# 70,000 தமிழர்களில் 10,000 பேருக்கு மட்டுமே தமிழ்மொழி தெரியும்

## மொரீஷியஸ் பிரமுகர் கருத்து

— கே. ஜி, எம் —



"உலகத்தமிழருக்காக குரல் கொடுத்தவர், குரல் கொடுப்பவர் கலைஞர் கருணாநிதி தான். தமிழ் நாட்டில் அவர் இன்று ஆட்சியில் இல்லாதது, அயல்நாடுகளில் வாழும் தமிழருக்கெல்லாம் பேரிழப்பாகும்" என்று மொரிஷியஸ் நாட்டின் தமிழ் கல்வி அதிகாரியான திரு. அ. புஷ்பரதம் "ஈழநாடு" பத்திரிகைக்கு நேற்று அளித்த சிறப்பு பேட்டியில் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் தனது மனைவியாருடன் இலங்கை வந்து சேர்ந்த திரு. புஷ்பரதம் நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார். இங்கு அவர் இரண்டு தினங்கள் தங்கியிருப்பார்.

பொதுநல நாடுகளின் புலமைப் பரிசில் பெற்று ஒரு வருடமாக மதுரை தியாகராசர் கல்லூரியில் சைவ சித்தாந்தத்துறையில் சிறப்புக் கல்வி பெற்று வரும் திரு. புஷ்பரதம், மொரீஷியஸிலிருந்து சிங்கப்பூர், மலேசியா சென்று இந்தியா திரும்பி நேற்று முன்தினம் இலங்கை வந்துள்ளார்.

"மொரீஷியஸில் தமிழர் நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. சிங்கப்பூரில் தமிழர் நிலை சீராகிறது. மலேசியாவிலும் இதே கதி தான். அங்கு வாழும் தமிழ் மக்கள் எல்லாம் அண்மையில் நடைபெற்ற தமிழக சட்டமன்றத் தேர்தலில் கலைஞர் கருணாநிதியின் கூட்டணிதான் வெற்றி பெறும் ஆட்சியில் அவர் அமருவார் என்று எதிர்பார்த்தனர். ஆனால் கிடைத்தது பெரும் ஏமாற்றமே. இதற்குக் காரணம், அயல்நாடுகளில் வாழும் தமிழ் மக்களின் நிலை பற்றி குரல் எழுப்புபவர் கலைஞர் கருணாநிதிதான் என்பது இந்த நாட்டு மக்களுக்குத் தெரியும். இந்த நாடுகளில் வாழும் மக்கள் தமிழ்நாட்டை ஒரு தாய் நாடாக, மானசீகமாக நேசிக்கின்றார்கள். தமிழகத்தில் ஆட்சி நடத்துவோர் அயல் நாடுகளில் வாழும் தமிழ் மக்களின் நலனில் அவசியம் அக்கறை செலுத்தவேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள்" என்று தெரிவித்த மொரீஷியஸ் பிரமுகர் திரு. அ. புஷ்பரதம் இப்பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:

### 'அறிவை அள்ளி வழங்கினார்'

"திரு. எம். ஜி. ராமச்சந்திரன் ஒரு தடவை மொரீஷியஸுக்கு வந்திருந்தார். அவரிடம், எம்மை எதிர்நோக்கியுள்ள பல கஷ்டங்கள் குறித்து எடுத்துரைத்தோம். தமிழ் மொழியை இங்கு பாதுகாக்க இளம் சிறார்களுக்கு தமிழ் பாடநூல்கள் அனுப்பிவைக்குமாறு கோரினோம். எமது நாட்டு சிறந்த தமிழ் மாணவருக்கு புலமைப்பரிசில் கிடைக்க ஒழுங்கு செய்யுமாறும் வேண்டியிருந்தோம். சில நூல்களை மட்டும் அனுப்பி வைத்தார். பின்னர் தொடர்பே இல்லை. இதன்பின்னர் கலைஞரிடம் எமது நிலையை விளக்கி கடிதம் எழுதினோம். சிறுவர்களுக்காக பன்னிரண்டாயிரம் தமிழ் மொழி பாடநூல்களை உடன் அனுப்பிவைத்தார். இவ்வளவு பெரும் தொகையான தமிழ் நூல்களைக்கண்டு மொரீஷியஸிலுள்ள இந்தியத் தூதரே திகைத்துவிட்டார்!

### "இப்படியும் அவலநிலை"

"நாங்கள் தமிழர்தான். ஆனால் எங்கள் வீட்டில் பேசப்படுவது பிரெஞ்சு மொழிதான். தாலாட்டும் பிரெஞ்சு மொழியில்தான்! அரசாங்க புள்ளி விபரப்படி அங்கு 46,000 தமிழர் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் 70,000க்கும் அதிகமான தமிழர் அங்கு இருக்கிறார்கள். இவர்களில் 10,000க்கும் குறைவான தமிழர்களே தமிழில் பேசமுடியும். இவர்களும் மூத்த தலைமுறையினர் தான். இளைய தலைமுறையினருக்கு தமிழ்பேசத்தெரியாது. இந்த அவல நிலையைப்போக்க தமிழ்நாடுதான் எமக்கு கைகொடுக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். ஆனால் தடிகள் ஆட்சி எங்கள் எண்ணத்தை ஈடுசெய்யாது. அயல் நாடுகளில் வாழும் தமிழர் நிலை குறித்து தடிகள் கட்சிக்கு அக்கறை இல்லை. அன்னிய நாட்டு விவகாரத்தில் தலையிடுவதில்லை என்று இவர்கள் காரணம் கூறலாம். இதனை ஏற்கமுடியாது. ஒரு நாட்டில் தனது இனம் அழிந்துகொண்டு போவதை தன்மானமுள்ள தமிழன் விரும்பமாட்டான்! தமிழகத்தில் கலைஞர் கருணாநிதி, ஆட்சியில் இல்லாதது சிங்கப்பூர், மலேசியா, மொரீஷியஸ் நாடுகளில் வாழும் தமிழருக்கு பேரிழப்பாகும். இங்கு வாழுகின்ற தமிழர் நிலை குறித்து கலைஞர் ஒருவரால் மட்டுமே குரலெழுப்பமுடியும்; சாதிக்கமுடியும். தமிழன் எங்கு இருந்தாலும் அவன் உரிமையுடன் வாழவேண்டும் என்று விரும்புபவர் கலைஞர். நாமும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளோம்" என்று திரு. அ. புஷ்பரதம் கூறுனார்.

## அமைச்சர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சப்பெருமான் ஆலயத்தில் நடைபெறும் விசேட பூசையில் கலந்துகொள்வார். அங்கிருந்து அமைச்சர் ஊர்வலமாக கஸ்தூரியார் வீதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள "லக்சலை" கட்டிடத்திற்கு அழைத்துச் செல்லப்படுவார். 11 மணிக்கு 'லக்சலை' நிறுவனத்தைத் திறந்துவைப்பார். பின்னர் யாழ். செயலகத்திற்கு சென்று புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் தொழிலாளர்கள் பாவிக்கும் ஆயுத விற்பனை நிலையத்தை அமைச்சர் திறந்துவைப்பார். மாலை 4-30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ள சுவாமி விவேகானந்தர் விழாவில் அமைச்சர் கலந்துகொள்வார்.

மூன்றாம் நாள் சனிக்கிழமை காலை அமைச்சர் நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்திற்குச் சென்று விசேட பூசையில் கலந்துகொள்வார். 10-30 மணிக்கு வெளநந்த விகாரைக்கு விஜயம் செய்வார். பின்னர் புங்குடுதீவிற்குச் சென்று அங்கு புதிதாக அமைக்கப்பட்டுள்ள நூலக நெசவு நிலையத்தை ஆரம்பித்துவைப்பார். பகல் 1 மணிக்கு மண்டைதீவிலுள்ள மீனுணவு தயாரிப்பு நிலையத்தைப் பார்வையிடுவார் அன்று மாலையே அமைச்சர் கொழும்பு திரும்புவார். (கொ)

## யாழ். மாநகரசபை பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகரசபையின் விசேட பொதுக்கூட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் சபை மண்டபத்தில் முதல்வர் திரு. இராசா விசுவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (கு)

## நீதிபதிக்கு......

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

ருக்கும் உரிமைகிடையாது. தேவையற்றமுறையில் எவரும் ஈடுபடக்கூடாது. எதிரிகளை பயமுறுத்தி கரைச்சல் கொடுத்தால், இங்குவந்து பொலிசுப்படையைச் சேர்ந்தவர்கள் விசாரணையைப் பார்வையிட அனுமதிக்கப்படமாட்டாது.

முதலாம் எதிரி விளக்கமறியலில் இருக்கிறார். பிணையில் நிற்கும் 2ம் எதிரி சொந்த நலன்களுக்கு தேவையற்றவிதத்தில் பல இடங்களிலும் சுற்றித்திரிந்து அவருக்கு தீங்குஏற்பட்டால் அவர்தான் பொறுப்பாளியாவர். (ச)

## 1ம் எதிரி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்களை நகைகளை அபகரித்ததாகவும் ராஜன் அல்லது ராஜ்குமார், பெரண்டியல் பெர்னாண்டோ ஆகியோர் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி எஸ். இராமச்சந்திரன் ஆஜரானார். 2ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர் தவராசா, சட்டத்தரணி ஆர். சிற்சிவசயா, ஆகியோர் ஆஜரானார்கள். பொலிஸாருக்கு உதவியாக சட்டத்தரணி எஸ். சோமசுந்தரம் நீதவானால் நியமிக்கப்பட்டிருந்தார்.

மருத்துவத்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சந்திரசேகரன் சான்றுப்பொருட்களை கோர்ட்டில் சமர்ப்பித்தார்.

விசாரணையை பார்ப்பதற்கு கோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமானோர் திரண்டிருந்தனர். சாட்சிகளும் வந்திருந்தனர்.

நீதவான் விசாரணையை இம்மாதம் 30ம் தேதிக்கு ஒத்திவைத்துள்ளார். (ச)

## மரண அறிவித்தல்

### ஜெ. அ. ஜெகராஜா (J.A.Jeharajah)

(சுகாதார அமைச்சு, பிரதான கணக்காளர்)

காலமானார்.

இவர் அச்சுவேலி காலஞ்சென்ற வி. ஜே. பொன்னையா, திருமதி பொன்னையா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும், பிலோமினாவின் அன்புக் கணவனும், டொலி, எமில் நெவில், மெறில் இவர்களின் அன்புத் தந்தையும், ஜெயக்குமாரின் மாமனாரும் கணக்காளர் சிங்கராயர், அருட்திரு ஜே. பி. செல்வராஜா, அருட்செல்வி ஜெயரேசம், ஏ. சி. மேரி அக்னெஸ், ராணி, நவம், ஆன் சபினம் இவர்களின் அன்புச் சகோதரனும், எஸ். ஜே. யோசப் தம்பதிகளின் மருமகனும் ஆவர்.

அன்னாரின் நல்லடக்கம் கொழும்பு கனத்தை மயானத்தில் இன்று 18-ந் திகதி புதன் மாலை 4-30 மணிக்கு நடைபெறும்.

No. 5, Block K,
Government Flats,
Colombo 4.

6079

## இலங்கை ஆசிரியர் சங்கம்

### 23-வது வருடாந்தப் பொதுக்கூட்டம்

இடம்:
புதிய நகர மண்டபம், கொழும்பு
காலம்:
26-6-80 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பம்
எல்லா அங்கத்தவர்களும் அழைக்கப்படுகிறார்கள்
அங்கத்துவ உறுதி செய்து பூர்த்தி செய்யப்பட்ட புகைப்பிரத ஆவணச்சீட்டு, கடமை லீவுக்கான விண்ணப்பங்களை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மல்லாகம் மகாவித்தியாலயம்,
மல்லாகம்,
16-6-80.

த. தேவராசா,
யாழ். மாவட்டச் செயலாளர்.

6078

ஈழநாடு லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் ஈழநாடு அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a newspaper at the General Post Office Sri Lanka under No. CE/8948/78. The Eelanadu, Post Box No. 49, Telegrams "Eelanadu", Phone 389. ... 18-ந் திகதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org